ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிரபன்னர்கள் அநுஷ்டிக்கவேண்டிய

# நித்தியாநுஷ்டானவிதியும்,

## திருவாராதனக்கிரமமும்,

ஸ்ரீமணவாளமாமுநிகள்முதல்பெரியபெருமாள்வரையில்

## அவரவர்கள் தனியன்களும்

ஆழ்வார்கள் பதின்மரோடு

ஆண்டாள்மதுரகவிகளுடையவும், ஸ்ரீபாஷ்யகாரருடைய வும், பெரியபெருமாள் பெரியபிராட்டியாருடையவும்,

வாழித்திருநாமங்களும், சாற்றுமுறையும்.

இஃது

ஸ்ரீமான். உ. வே. அரசாணிபாலை

கந்தாடை

க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகளால்

பரிசோதித்தபிரதிக்கிணங்க,

ஸ்ரீவானமாமலைமடம் ஸ்வாமி

ஸ்ரீமான் ஸ்ரீசடகோபராமாநுஜ ஸ்வாமிகளின்

திருவடிஸம்பந்தியாகிய

கெந்தம் - வரதராமாநுஜதாஸரால்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு,

கெ. லோகநாதமுதலியார்

அவர்களது

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

சென்னை:

இதன் விலை அணா—4.

RangaRakes tamilnavarasam.com



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமத் வரவரமுநயே நம:.

# பிரபன்னநித்தியாநுஷ்டானச் சுருக்கம்.

க - வது பிரபன்னன்.

காலையிலெழுந்து கைகூப்பிக்கொண்டு, வாக்யகுருபரம்பரை, த்வயம முதலியவற்றை யநுஸந்திக்க வேண்டும்.

உ - வது சௌக்கியத்துக்குப் போதல்.

சௌக்யமானபின்பு மிருத்திகையால் சௌசம்பண்ணி, வாயைக கொப்பளித்து, தந்த தாவனஞ்செய்து, ஆசமனம் பண்ணவேண்டும்.

ங - வது தீர்த்த மாடுதல்.

“ஆயிரந்தோள்” முதலியவற்றை யநுசந்தித்து, ஸ்நானஞ்செய்து ஸ்ரீமதேராமாநுஜாயநம: என்று துவட்டிக்கொண்டு, மடிவஸ்திரந்தரித்து, ஆசமனமும் அங்கந்யாசமுஞ் செய்ய வேண்டும்.

ச - வது திருமண்காப்புத் தரித்தல்.

ஸ்ரீமதேநாராயணாயநம: என்று ஸ்தலசுத்திசெய்து, ஆசனத்தின்மீது திருமண்பெட்டியை எழுந்தருளச்செய்து, ஸ்ரீபூதேவ்யைநம: என்று திருமண்கதினை அபிமந்திரித்து, ஸ்ரீசை

RangaRakes tamilnavarasam.com

லேசதனியன் தொடங்கி, திருப்பல்லாண்டு முதலியவற்றை திருமண்காப்பும் ஸ்ரீசூர்ணமுந்தரிக்கிறவரையி லநுசந்தித்து, பின்பு திருமணித்தாழ்வடங்கள் முதலியவற்றை அணிந்து கொண்டு, அஞ்சலிஹஸ்தனாய்க் கேசவாதிநாமங்கள் முதலியவற்றை அநுசந்திக்கவேண்டும்.

### ௫ - வது காலக்ஷேபஞ் செய்தல்.

ஸ்ரீபகவத்விஷயாதி வியாக்யானகிரந்த காலக்ஷேபஞ் செய்து, தீர்த்தவடியைச்சேர்த்து, தீர்த்தம்ஸ்வீகரித்துக்கொண்டு, திருமண்பெட்டியைச் சேர்த்துவிடல் வேண்டும்.

### ௬ - வது திருக்காப்பு நீக்குதல்.

பெருமாள்சந்நிதியில் தெண்டன்ஸமர்ப்பித்து, திருப்பள்ளியெழுச்சி முதலியவற்றை யநுசந்தித்து, நாயகனாய்நின்ற பாசுரத்தால் கையைத்தட்டித் திருக்காப்புநீக்கி, திருவாலவட்டஞ்சமர்ப்பித்து, திருப்பள்ளிசோதித்து, மாரிமலையென்பதனால் - மந்திராசனமும், அன்றிவ்வுலகமென்பதனால் - மங்களாசாஸனமுஞ் செய்து, வாக்யகுருபரம்பராதிகளை யநுசந்திக்கவேண்டும்.

### ௭ - வது வட்டில்களில் தீர்த்தஞ் சேர்த்தல்.

சொம்புதீர்த்தத்தில் திருத்துழாய் முதலியவைகளைச் சேர்த்து, சொம்பை * வலது கையினால் மூடிக்கொண்டு, ஐந்துதரம் உத்தரவாக்யத்தா லபிமந்திரித்து, அத்தீர்த்தத்தை ஐந்து வட்டில்களிற்பூரித்துத் திருத்துழாய்சேர்த்து அபிமந்திரித்துப் புரோக்ஷிக்கவேண்டும்.

### ௮ - வது ஸ்வாசார்யனுக்குத் திருவாராதனஞ் சமர்ப்பித்தல்.

ஆசார்யனுக்குத் தனியே இரண்டுவட்டில்களில் தீர்த்தம் பூரித்து, அஸ்மத்குருப்யோநம: என்று - அர்க்யபாத்யாசமன

* வலதுகையால் மூடினாலும் இடதுகையும் அதற்குச்சஹாயமாயிருக்கிற பாவனையாய் வலதுகையைத் தொட்டுக்கொண்டே யிருக்கவேண்டும்; இப்படியே மேலுமுணர்க.

RangaRakes tamilnavarasam.com

மும், வெண்ணெயளைந்த பாசுரங்களினால் - திருமஞ்சனமும், வகையாலென்கிறபாசுரத்தால் - தூபமும், கேசவாதிநாமங்களால்-திருமண்காப்பும், பூசுஞ்சாந்தென்கிற பாசுரத்தால்-சாத்துப்படிமுதலியதும், பரிவதிலீசனென்கிற பாசுரத்தால்-தூபமும், வையந்தகளியானென்னும் பாசுரத்தால் - தீபமும், பல்லாண்டென்கிற பாசுரத்தால் - கர்ப்பூரமும், அர்க்யபாத்யாசமனமும், சென்றாற்குடையாமென்கிறபாசுரத்தால் - மந்திரபுஷ்பமும் ஸமர்ப்பிக்கவேண்டும்.

### ௯ - வது ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதனஞ் சமர்ப்பித்தல்.

ஆசார்யனுக்கு விநியோகித்த இரண்டு வட்டில்களையுஞ் சோதித்து, வேறேதீர்த்தம் பூரித்து, பராங்குசபரகால யதிவராதிப்யோநம: என்று அநுஸந்தித்து, ஆசார்யன் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதனஞ் சமர்ப்பிக்கிறதாகப்பாவித்து, மேற்குறித்தபடி செய்யவேண்டும்.

### க௦ - வது பெருமாள், பிராட்டியார் முதலியவர்களுக்குத் திருவாராதனஞ் சமர்ப்பித்தல்.

ஐந்துவட்டில்களிலும் பூரித்துவைத்திருக்குந் தீர்த்தத்தினால் - ஸர்வமங்களவிக்ரஹாய, ஸமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணாயநம: என்று மேற்குறித்தபடி ஸமர்ப்பிக்க வேண்டும்.

### கக - வது திவ்யப்ரபந்தஞ் சேவித்தல்.

குருமுகமென்னுந் தனியன்தொடங்கி, திருப்பல்லாண்டு முதலியவைகளைச் சேவிக்கவேண்டும்.

### கஉ - வது பிரசாதங்கண்டருளப் பண்ணுதல்.

ஸர்வமங்கள விக்ரஹாயமுதலிய வாக்யங்களால் போஜ்யாசனத்தி லெழுந்தருளச்செய்து, அர்க்யபாத்யாசமனம் சமர்ப்பித்து, உத்தரவாக்யத்தால் ஸ்தலசுத்திசெய்து, தளிகையைத் தீர்த்தத்தினால் ப்ரோக்ஷித்து, நாறுநறும்பொழில், இன்றுவந்தித்தனை, கூடாரை - என்கிற பாசுரங்களையும்-ஸர்வமங்

RangaRakes tamilnavarasam.com

களவிக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநம: என்னும் மந்திரத்தையநுசந்தித்து,பெருமாள்முதலானவர்க்கும், பராங்குசபரகால யதிவராதிப்யோநம: என்று-நம்மாழ்வார்முதலிய பூர்வாசார்யர்களுக்கும், அஸ்மத்குருப்யோநம: என்று-ஸ்வாசார்யனுக்கும்- அமுதுந்தீர்த்தமுங் கண்டருள்வித்து, பின்பு அர்க்யபாத்யாசமனம் ஸமர்ப்பிக்கவேண்டும்.

கங - வது அடைக்காயமுது செய்வித்தல்.

பரியங்காசனத்தி லெழுந்தருளச்செய்து, அர்க்யாதிகள் ஸமர்ப்பித்து, போய்ப்பாடுடைய என்கிறபாசுரத்தால் மேற்கண்டபடி அடைக்காயமுது செய்வித்து, அர்க்யாதியும் கர்ப்பூரமுஞ் சமர்ப்பிக்கவேண்டும்.

கச - வது சாற்றுச் செய்தல்.

சிற்றம், வங்கம், இருப்பிடம், இன்புற்ற, அங்கயல்,பூமன்னு, பல்லாண்டு, அடியோமோடும், ஸர்வதேசமுதலிய-வாழித்திருநாமங்களுஞ் சேவிக்கவேண்டும்.

கரு - வது திருக்காப்பு சேர்த்தல்.

சையாசனத்தி லெழுந்தருளச்செய்து, உபசாராபதேசேன என்கிற சுலோகத்தை யநுசந்தித்துத் திருக்காப்புச் சேர்த்துத் தெண்டன் சமர்ப்பிககவேண்டும்.

கசா - வது பிரசாதம் ஸ்வீகரித்தல்.

பெருமாள் முதலியவர்களுக்குக் கண்டருளப்பண்ணின சேஷத்தை ஆசார்யன்தனியனை யநுஸந்தித்து ஸ்வீகரிக்க வேண்டும்.

கஎ - வது காலக்ஷேபஞ் செய்தல்.

பகவத்விஷய அஷ்டாதசரஹஸ்யாதி வியாக்கியானகாலக்ஷேபஞ் செய்யவேண்டும்.

கஅ - வது இராத்திரியில் பிரஸாதங் கண்டருளச்செய்தல்.

இராத்திரியில் மடியாய்க்கையைத்தட்டிப் பெருமாள்சந்நிதித் திருக்காப்புநீக்கிப் புதியதீர்த்தத்தினால் வட்டில்களைப்

பூரித்து, முன்சொன்னபடியே அர்க்யாதிஸமர்ப்பித்து, ஸ்ரீ
சைலேசதனியன் தொடங்கி-திருப்பல்லாண்டு, ஆனிரை, இந்
திரன், சென்னி, அமலனாதி, கண்ணிநுண்சிறுத்தாம்பு, ஏழை
யேதிலன், ஆழியெழச்சங்கும் இவைகளைச்சேவித்து, மேற்
கண்டபடி பிரசாதமுதலியவற்றைக் கண்டருளச்செய்து, தத்
சேஷப்பிரசாதத்தை ஸ்வீகரித்து, வாக்யகுருபரம்பரையையு
ம்,த்வயத்தையும் அநுசந்தித்து, பகவத்பாகவதாசார்யர்களை
பாவநாப்ரகர்ஷத்தாலே சேவித்துக்கொண்டே சயனித்து, ம
றுபடியும் விழித்துக்கொள்ளும்போது ஷை குருபரம்பரை
யையும் த்வயத்தையு மநுசந்திக்கவேண்டும்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

ஜீயர் திருவடிகளே சரணம்.

RangaRakes tamilnavarasam.com



ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

ஸ்ரீமத் வரவரமுநயே நம꞉.

# பிரபன்ன நித்யாநுஷ்டானவிதி.

## ௧. நித்திரையிலிருந்து விழித்தல்.

பிரபன்னன் நித்யமாய்க் காலையிலெழுந்திருக்கும்போது படுக்கையிற்றானே கைகூப்பிக்கொண்டு, வாக்யகுருபரம்பரையையும், த்வயத்தையும் அநுஸந்தித்து; தன்னாசார்யன்முதல் ஆழ்வாராசார்யர்களையும் - பெரியபிராட்டியார், பரமபதநாதன், கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம்முதலான நூற்றெட்டு திவ்யதேச எம்பெருமான்களையுந் தியானித்து; (௧-ஸ்ரீசைலேச)தனியன்முதல் (௨ - திருப்பள்ளியெழுச்சியும், ௩ - திருப்பாவை முழுதும்) தனியன்களுடன் அநுசந்திக்கவேண்டும். அதற்குச்சமயமில்லாவிடில், முதற்பாசுரமும், (௪ - சிற்றஞ்சிறுகாலே, ௫ - வங்கக்கடல்) இந்த மூன்றுபாசுரங்களாகிலும் அநுசந்திககவேண்டும்.

எழுந்தபின்பு (௬ - குஷ்யதே) என்னுஞ் ச்லோகத்தை யநுசந்தித்து, ஸ்ரீரங்கயாத்திரை செய்கிறதாகபாவித்து, பத்தெட்டடி கோயில் முகமாய்நோக்கி நடககவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## ௨. சௌக்யத்துக்குப் போதல்.

சௌக்யத்துக்குப் போகையில், கையைத்தட்டிக்கொண்டு காலையில்-வடக்குமுகமாயும், மாலையில்-தெற்கு முகமாயுமிருந்து சௌக்யமானபின்பு; குதசௌசமும், பதசௌசமும்பண்ணி ௰௨, ௧௫, ௮-அல்லது ௩-தரமாகிலும் மிருத்திகையால் கரசௌசஞ்செய்துகொண்டு வேறேதீர்த்தத்தால்பதினாறுதரம் வாயைக்கொப்பளித்து; ஆலம்விழுது, வேல், பூலா, நாயுருவி இவைகளிலொன்றைச் சோதித்து, கிழக்கு அல்லது மேற்குமுகமாக ஓரிடத்திலிருந்து தந்ததாவனஞ்செய்து, வாயை நன்றாய்க்கொப்பளித்துக் காலலம்பி உட்கார்ந்துகொண்டு, உளுந்தெடை தீர்த்தத்தால் அஸ்மத்குருப்யோநம:, அஸ்மத் பரமகுருப்யோநம:, அஸ்மத் ஸர்வகுருப்யோநம: என்றுவது - அச்யுதாயநம:, அநந்தாயநம:, கோவிந்தாயநம: என்றுவது உச்சரித்து, மூன்றுதரம் ஆசமனம் பண்ணவேண்டும்.

---

## ௩. தீர்த்த மாடுதல்.

தான் ஸ்நானம்செய்வதற்காக வைத்திருக்கும் தீர்த்தத்தில் ஒரு செம்புதீர்த்தமெடுத்து, (௭ - ஆயிரந்தோள், ௮ - இலைத்தலை, ௩ - த்ரிஸ்ர: கோட்ய:) என்னுமவைகளை யநுசந்தித்து; பெரியபெருமாள், பெரியபிராட்டியார், சேனைமுதலியார், நம்மாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஸ்ரீஆளவந்தார், பெரியநம்பி, உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை; வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள்முதலான ஸ்ரீமத்பகவத்பாகவதஅஸ்மதாசார்யர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமென்று அபிமந்த்ரித்து, சிரசில் ப்ரோக்ஷித்துக்கொண்டு, ஸ்ரீமத்பகவத்பாகவத ஸம்ஸ்லேஷத்துக்குறுப்பாகக்கிட்டி யநுபவிக்கைக்கு தேஹத்தை யலம்புகிறேனென்று ஸ்நானஞ் செய்யவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

பின்பு வேண்டியவரையில் எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றுவது, (௧௦ - அனிஸம்பஜதாம்) என்கிற ஐந்துசு லோகங்களையும் அநுசந்தித்துக்கொண்டாவது, தௌதவஸ் திரத்தால்துவட்டி,தௌதமானபரிவட்டந்தரித்துக் காலலம்பி உட்கார்ந்து,முன்போல மூன்றுதரம் ஆசமனம்பண்ணி, அடியில் கண்டிருக்கிறபடி ;—

கேசவாயநம: -என்று-பெருவிரலினால் - வலதுகன்னத்திலும்
நாராயணாயநம: ,, பெருவிரலினால் - இடதுகன்னத்திலும்
மாதவாயநம: ,, பவித்திரவிரலினால்-வலதுகண்ணிலும்
கோவிந்தாயநம: ,, பவித்திரவிரலினால்-இடதுகண்ணிலும்
விஷ்ணவேநம: ,, ஆள்காட்டிவிரலினால்-வலதுமூக்கிலும்
மதுஸூதநாயநம: ,, ஆள்காட்டிவிரலினால்- இடதுமூக்கிலு[ம்
த்ரிவிக்ரமாயநம: ,, சுண்டுவிரலினால்-வலதுகாதிலும்
வாமநாயநம: ,, சுண்டுவிரலினால்-இடதுகாதிலும்
ஸ்ரீதராயநம: ,, நடுவிரலினால்-வலதுபுயத்திலும்
ஹ்ருஷீகேசாயநம: ,, நடுவிரலினால்-இடதுபுயத்திலும்
பத்மநாபாயநம: ,, ஐந்துவிரலினாலும்-நாபியிலும்
தாமோதராயநம: ,, ஐந்துவிரலினாலும்-பிடரியிலும்

அங்கந்யாஸ, கரந்யாஸங்கள் செய்யவேண்டும்.

---

## ௪. திருமண்காப் பணிதல். *

ஸ்ரீமதேநாராயணாயநம: என்கிற உத்தரவாக்யத்தை யநுசந்தித்து ஓரிடத்தில் கொஞ்சம் தீர்த்தத்தையும் புரோக்ஷித்து, ஒருயர்ந்த ஆசனத்தின்மீது திருமண்பெட்டியை எழுந்தருளச்செய்து,கிழக்குமுகமாய்த் தான் தர்ப்பாசனம் அல்லது மணையின் மீதாவதிருந்துகொண்டு, கையைத்தட்டி திருமண்பெட்டியையவிழ்த்து,கோகர்ணத்தில் தீர்த்தத்தைப் பூரித்துத் திருமண்கட்டி எடுத்துக் கையில்வைத்து மூடிக்கொண்டு

* திருமண்காப்பைக்குறித்து சுருதிமுதலிய பிரமாணங்கள் தென்னாசாரியர் ப்ரபாவதீபிகையில் கண்டுகொள்க.

RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீபூதேவ்யைநம: என்று அபிமந்திரித்து, கோகர்ணத்துத் தீர்த்தத்தை வலக்கையாலெடுத்து இடக்கையில்விட்டுத் திருமண் சேர்த்துக்கொண்டே, ஸ்ரீசைலேசதயாபாத்ரமென்னும் தனியனைத் தொடங்கி, (௧௧-திருப்பல்லாண்டு,) (௧௨-கண்ணிநுண்சிறுத்தாம்பு,திருப்பாவை,) (௧௩-இராமாநுசநூற்றந்தாதி) இவைகளைக் காலோசிதமாகத் திருமண் ஸ்ரீசூர்ணமணிகிறவளவில் - பூர்த்தியாயாகிலும், சுருக்கமாய் - முதற்பாசுரம் சாற்றுப்பாசுரமாகிலும் அநுசந்திக்கவேண்டும்;—

## திருமண்தரிக்கும்போது.

| | | |
|---|---|---|
| ௧-கேசவாயநம: - | என்று - | நெற்றியிலும் |
| ௨-நாராயணாயநம: | ,, | நாபியிலும் |
| ௩-மாதவாயநம: | ,, | மார்பிலும் |
| ௪-கோவிந்தாயநம: | ,, | நெஞ்சிலும் |
| ௫-விஷ்ணவேநம: | ,, | வலதுநாபியிலும் |
| ௬-மதுஸூதநாயநம: | ,, | வலதுபுயத்திலும் |
| ௭-த்ரிவிக்ரமாயநம: | ,, | வலதுதோளிலும் |
| ௮-வாமநாயநம: | ,, | இடதுபக்கநாபியிலும் |
| ௯-ஸ்ரீதராயநம: | ,, | இடதுபுயத்திலும் |
| ௧௦-ஹ்ருஷீகேசாயநம: | ,, | இடதுதோளிலும் |
| ௧௧-பத்மநாபாயநம: | ,, | அடிமுதுகிலும் |
| ௧௨-தாமோதராயநம: | ,, | பிடரியிலும் |

ஷை மந்திரங்களை அநுசந்தித்துக்கொண்டே திருமண் தரித்தபின்பு;—

## ஸ்ரீசூர்ணந்தரிக்கும்போது.

| | | |
|---|---|---|
| ௧-ஸ்ரீதேவ்யைநம: - | என்று - | நெற்றியிலும் |
| ௨-அம்ருதோத்பவாயைநம: | ,, | நாபியிலும் |
| ௩-கமலாயைநம: | ,, | மார்பிலும் |
| ௪-ஸாதுதேவ்யைநம: | ,, | நெஞ்சிலும் |

௫-விஷ்ணுபத்நியைநம: ,, வலதுநாபியிலும்
௬-வைஷ்ணவ்யைநம: ,, வலதுபுயத்திலும்
௭-வராரோஹாயைநம: ,, வலதுதோளிலும்
௮-ஹரிவல்லபாயைநம: ,, இடதுநாபியிலும்
௯-சார்ங்கிண்யைநம: ,, இடதுபுயத்திலும்
௧0-ஸ்ரீதேவதேவ்யைநம: ,, இடதுதோளிலும்
௧௧-ஸ்ரீமஹாலக்ஷ்ம்யைநம: ,, அடிமுதுகிலும்
௧௨-ஸர்வாங்கஸுந்தர்யைநம: ,, பிடரியிலும் கிரமப்

படி யநுசந்தித்துக்கொண்டு த்வாதச ஊர்த்வபுண்ட்ரங்கள் தரிக்கவும்; அதற்குச்சாவகாச மில்லாவிடில், ஆதியுமந்தமுமாகிய-நெற்றியிலும் பிடரியிலுமாவது தரித்தபின்பு, கைகழுவாது நின்றசேஷத்தைப் பூமியிற்சிந்தாமல் இரண்டுகைகளையுஞ் சேர்த்துச் சிரசில் தடவிக்கொள்ளவும்.

நூற்றெட்டுதிவ்யதேச பாவனையாகிய- நூற்றெட்டுத் திருத்துழாய் மணிகளுள்ளமாலையும், எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகள் பாவனையாகிய எழுபத்துநான்கு தாமரைமணிகளுள்ள நளிநாக்ஷமாலையும், திருப்பவித்ரமாலையுங் கழுத்தில் அணிந்துகொண்டு; தன்னாசாரியன் திருவடிநிலையைச் சிரசில் வைத்துக்கொண்டு ; அஞ்சலிஹஸ்தனாய் ;—

௧—நெற்றியில் - கேசவாயநம: - என்றும்
௨—வயிற்றில் - நாராயணாயநம: - என்றும்
௩—மார்பில் - மாதவாயநம: - என்றும்
௪—நெஞ்சில் - கோவிந்தாயநம: - என்றும்
௫—வலதுவயிற்றில் - விஷ்ணவேநம: - என்றும்
௬—வலதுபுயத்தில் - மதுஸூதநாயநம: - என்றும்
௭—வலதுபுயத்தோளில் - த்ரிவிக்ரமாயநம:-என்றும்
௮—இடதுவயிற்றில் - வாமநாயநம: - என்றும்
௯—இடதுபுயத்தில் - ஸ்ரீதராயநம: - என்றும்
௧0—இடதுதோளில் - ஹ்ருஷீகேசாயநம: - என்றும்

RangaRakes tamilnavarasam.com

கக—அடிமுதுகில் - பத்மநாபாயநம: - என்றும்
கஉ—பிடரியில் - தாமோதராயநம: - என்றும்;

---

### க. நெற்றியில்,—

లలాటే సతతం దేవ్యా శ్రియా సహ విరాజితం-
చతుశ్చక్రం నమస్యామి కేశవం కనకప్రభం.

லலாடேஸததம்தேவ்யா ஸ்ரீயாஸஹவிராஜிதம்-
சதுஶ்சக்ரம்நமஸ்யாமி கேஶவம்கநகப்ரபம்—என்றும்,

('லலாடே' நெற்றியில்,—'ஸததம்' ஸர்வகாலமும்,—'ஸ்ரீயா' லக்ஷ்மீதேவியோடு,—'ஸஹ' கூட,—'விராஜிதம்' ப்ரகாசிக்கின்றவரும்,—'சதுஶ்சக்ரம்' நான்கு சக்கரங்களணிந்தவரும்,—'கநகப்ரபம்' ஸ்வர்ணம்போன்ற காந்தியுடையவருமான,—'கேசவம்' கேசவனென்னும் பேரையுடைத்தானபெருமானை,—'நமஸ்யாமி' ஸேவிக்கிறேன்.) (க)

---

### உ. வயிற்றில்,—

అమృతోద్భవయా దేవ్యా సమాశ్లిష్టమథోదరే-
నారాయణం ఘనశ్యామం చతుశ్శంఖం నమామ్యహం.

அம்ருதோத்பவயாதேவ்யா ஸமாஶ்லிஷ்டமதோதரே-
நாராயணம்கநஶ்யாமம் சதுஶ்ஶங்கம்நமாம்யஹம்—என்றும்,

('அம்ருதோத்பவயா' அம்ருதோத்பவையென்று பேரையுடைத்தாயிருக்கிற,—'தேவ்யா' பாரியையாலே,—'ஸமாஶ்லிஷ்டம்' ஆலிங்கனம் பண்ணப்பட்டவரும்,—'கநஶ்யாமம்' நீலமேகம்போன்ற நிறத்தையுடையவரும்,—'சதுஶ்ஶங்கம்' நான்கு சங்கங்களையுடையவரும், — 'நாராயணம்' நாராயணனென்னும் பேரையும் படைத்தவருமான பெருமானை,—'அஹம்' - நான்,—'உதரே' - வயிற்றின்கண்,—'நமாமி' - சேவிக்கிறேன்.) (உ)

RangaRakes tamilnavarasam.com

### ௩. மார்பில்,—

నిత్యంకమలయాశ్లిష్టం హృదయేహందయాంబుధిం।
మాధవంమణిభంగాభం చింతయామిచతుర్గదం.

நித்யம்கமலயாஶ்லிஷ்டம் ஹ்ருதயேஹம்தயாம்புதிம்-
மாதவம்மணிபங்காபம் சிந்தயாமிசதுர்க்கதம்—என்றும்,

('ஹ்ருதயே' திருமார்பிலே,—'நித்யம்' ஸர்வகாலத்திலேயும,—'கமலயா' கமலாதேவியோடே,—'ஶ்லிஷ்டம்' கூடிக்கொண்டு,—'தயாம்புதிம்' தயைக்கு ஸமுத்திரமபோலே முக்யஸ்தானமாய்,—'மணிபங்காபம்' இந்த்ரநீலமணிபோன்ற காந்தியையும்,—'சதுர்க்கதம்' நான்குகதைகளையு முடைத்தாயிருக்கிற,—'மாதவம்' மாதவனென்கிற பெருமாளை,—'அஹம்' நான்,—'சிந்தயாமி' தியானிக்கிறேன்.) (௩)

---

### ௪. நெஞ்சில்,—

దేవ్యాచచంద్రశోభిన్యా దేవకంఠేవిరాజితం।
చంద్రభాసంచతుశ్శార్ఙ్గం గోవిందమహమాశ్రయే.

தேவ்யாசசந்த்ரஶோபிந்யா தேவம்கண்டேவிராஜிதம்-
சந்த்ரபாஸம்சதுஶ்ஶார்ங்கம்கோவிந்தமஹமாஶ்ரயேஎன்றும்

('கண்டே' கழுத்தின்கண்,—'சந்த்ரஶோபிந்யாதேவ்யா' சந்திரசோபினியென்கிற தேவியோடே,—'விராஜிதம்' பிரகாசியாநின்றுகொண்டு,—'சந்த்ரபாஸம்' சந்திரன்போன்ற காந்தியையும்,—'சதுஶ்ஶார்ங்கம்' நான்குதனுசுகளையுமுடைத்தாயிருக்கிற,—'கோவிந்தம்தேவம்' கோவிந்தனென்கிறபெருமாளை,—'அஹம்' நான்,—'ஆஶ்ரயே' ஆஶ்ரயிக்கிறேன்.) (௪)

---

### ௫. வலதுபுறவயிற்றில்,—

విష్ణుపత్న్యాచక్ష్మయాదేవ్యా కుక్షౌదక్షిణపార్శ్వగం।
విష్ణుంచతుర్హలంవందే పద్మకింజల్కసన్నిభం.

விஷ்ணுபத்ந்யாக்யயாதேவ்யாகுக்ஷௌதக்ஷிணபார்ஸ்வகம்
விஷ்ணும்சதுர்ஹலம்வந்தேபத்மகிம்ஜல்கஸந்நிபம் என்றும்,

('குக்ஷௌதக்ஷிணபார்ஸ்வகம்' வலப்புறவயிற்றின்கண்,—'விஷ்ணுபத்ந்யாக்யயா' விஷ்ணுபத்நியென்று திருநாமமுடைய,—'தேவ்யா' பார்யாஸமேதராய்,—'சதுர்ஹலம்' நான்குகலப்பைகளைத் தரித்துக்கொண்டு, — 'பத்மகிம்ஜல்கஸந்நிபம்' தாமரஸபுஷ்பத்தின் தாதோடே ஸமானராயிருக்கிற,—'விஷ்ணும்' விஷ்ணுவென்கிற பெருமாளை,—'வந்தே' ஸேவிக்கிறேன்.) ௫

---

௬. வலதுபுயத்தில்,—

వైష్ణవీసంజ్ఞయాదేవ్యా కలితందక్షిణేభుజే
చతుర్ముసలమబ్జాభం సంశ్రయేమధుసూదనం.

வைஷ்ணவீஸம்ஜ்ஞயாதேவயா கலிதம்தக்ஷிணேபுஜே
சதுர்முஸலமப்ஜாபம் ஸம்ஶ்ரியேமதுஸூதநம் என்றும்,

('தக்ஷிணேபுஜே' வலப்புயத்தின்கண்,—'வைஷ்ணவீஸம்ஜ்ஞயாதேவ்யா' வைஷ்ணவியென்று பேருயுடைய தேவியோடே,—'கலிதம்' கூடிக்கொண்டு,—'சதுர்முஸலம்' நான்கு உலக்கைகளையும்,— 'அப்ஜாபம்' தாமரைப் பூப்போன்ற காந்தியையு முடைத்தாயிருக்கிற,—'மதுஸூதநம்' மதுஸூதனென்கிறபெருமாளை,—'ஸம்ஶ்ரியே' ஆஶ்ரயிக்கிறேன்.) ௬

---

௭. வலதுதோளில்,—

దక్షిణాంసేదయావార్ధిం వరారోహాధిపంప్రభుం
అగ్నివర్ణంచతుఃఖడ్గం భావయామిత్రివిక్రమం.

தக்ஷிணாம்ஸேதயாவார்த்திம் வராரோஹாதிபம்ப்ரபும்
அக்நிவர்ணம்சதுஃகட்கம் பாவயாமித்ரிவிக்ரமம் என்றும்,

('தக்ஷிணாம்ஸே' வலத்தோளினிடத்தே,—'தயாவார்த்திம்' கிருபைக்கு ஸமுத்ரமாயிருக்கிற,—'வராரோஹாதிபம்' வரா



RangaRakes tamilnavarasam.com

ரோஹையென்கிற தேவியோடேகூடிக்கொண்டு,—'ப்ரபும்' (ஆம்ரிதஸம்ரக்ஷணத்திலே) ஸமர்த்தராய்,—'அக்நிவர்ணம்' அக்கினியைப்போன்ற காந்தியையும்,—'சதுஃகடகம்' நான்குகத்திகளையு முடைத்தாயிருக்கிற,—'த்ரிவிக்ரமம்' த்ரிவிக்ரமனென்கிற பெருமானை,—'பாவயாமி' த்யானிக்கிறேன்.) ௭

---

## ௮. இடதுபுறவயிற்றில்,—

హరిప్రియావతంకుక్షౌ వామపార్శ్వస్థపుండ్రకం-
వామనంబాలసూర్యాభం చతుర్వజ్రంవిభావయే.

ஹரிப்ரியாவதம்குக்ஷௌ வாமபார்ஶ்வஸ்தபுண்ட்ரகம்
வாமநம்பாலஸூர்யாபம் சதுர்வஜ்ரம்விபாவயே என்றும்,

('குக்ஷௌவாமபார்ஶ்வஸ்தபுண்ட்ரகம்' இடப்புறவயிற்றிலிராநின்ற திருமண்காப்பை யடைந்து,—'பாலஸூர்யாபம்' பாலசூரியன்போன்ற காந்தியையும்,—'சதுர்வஜ்ரம்' நான்கு வஜ்ராயுதங்களையும் உடைத்தானவராய்,—'ஹரிப்ரியாவதம்' ஹரிப்ரியையென்கிற தேவியோடே கூடிக்கொண்டிருக்கிற, 'வாமநம்' வாமநனென்கிற பெருமானை,—'விபாவயே' த்யானிக்கிறேன்.) ௮

---

## ௯. இடதுபுயத்தில்,—

వామబాహౌ మహాబాహుం శార్ఙ్గిణంపతిమవ్యయం-
శ్రీధరంపుండరీకాభం చతుఃపట్టసమాశ్రయే.

வாமபாஹௌமஹாபாஹும் ஶார்ங்கிணம்பதிமவ்யயம்
ஸ்ரீதரம்புண்டரீகாபம் சதுஃபட்டஸமாஶ்ரயே என்றும்,

('வாமபாஹௌ' இடப்புயத்தின்கண்,—'மஹாபாஹும்' பெரியதிருத்தோள்களையும்,—'சார்ங்கிணம்' சார்ங்கமென்கிற தநுஸ்ஸையு முடையவராய்,—'அவ்யயம்பதிம்' நாஶரஹிதராய் அதிபதியாயிருக்குமவரும்,—'புண்டரீகாபம்' தாமரைபுஷ்பம்போன்ற காந்தியையுடைத்தானவரும்,—'சதுஃபட்ட

ஸம்' நான்கு பாணுகத்திகளை யுடைத்தாயிருக்கிறவருமான—'ஶ்ரீதரம்' ஶ்ரீதரனென்கிற பெருமாளை,—'ஆஶ்ரயே' ஆஶ்ரயிக்கிறேன்.) ௯

---

### ௧௦. இடதுதோளில்,—

దేవదేవీకయా దేవ్యా శ్రితం వామాంససంశ్రితం-
చతుర్ముద్గరమభ్యేమి హృషీకేశం తటిత్ప్రభం.

தேவதேவீகயாதேவ்யா ஶ்ரிதம்வாமாம்ஸஸம்ஶ்ரிதம்
சதுர்முத்கரமப்யேமி ஹ்ருஷீகேஶம்தடித்ப்ரபம் என்றும்,

('தேவதேவீகயாதேவ்யா'—தேவதேவியென்கிற தேவியினாலே,—'ஶ்ரிதம்' ஆஶ்ரயிக்கப்பட்டிருக்கிறவரும்,—'வாமாம்ஸ ஸம்ஶ்ரிதம்' இடத்தோளை ஆஶ்ரயித்திருக்கிறவரும்,—'சதுர்முத்கரம்' நான்கு உழல்தடிகளை யுடைத்தாயிருக்கிறவரும்,—'தடித்ப்ரபம்' மின்னல்போன்ற காந்தியையுடைத்தாயிருக்கிறவருமான,—'ஹ்ருஷீகேஶம்' ஹ்ருஷீகேசனென்கிற பெருமாளை,—'அப்யேமி' அடைகிறேன்.) ௧௦

---

### ௧௧. அடிமுதுகில்,—

పృష్ఠే సంహృష్టయా దేవ్యా మహాలక్ష్మ్యా విరాజితం-
పంచాయుధం పద్మనాభం ప్రణమామ్యర్కరోచిషం.

ப்ருஷ்டேஸம்ஹ்ருஷ்டயாதேவ்யா மஹாலக்ஷ்ம்யாவிராஜிதம், 'பஞ்சாயுதம்பத்மநாபம் ப்ரணமாம்யர்க்கரோசிஷம் என்றும்,

('ப்ருஷ்டே' இடுப்புக்குமேல் பின்முதுகில்,—'ஸம்ஹ்ருஷ்டயா' ஸந்துஷ்டையாயிருக்கிற,—'மஹாலக்ஷ்ம்யாதேவ்யா' மஹாலக்ஷ்மியென்கிற தேவியோடே,—'விராஜிதம்' பிரகாசியாநின்றவரும்,—'பஞ்சாயுதம்' ஐந்து ஆயுதங்களுடையவரும்,—'அர்க்கரோசிஷம்' ஸூரியன்போன்ற காந்தியை யுடையவருமான,—'பத்மநாபம்' பத்மநாபனென்கிற பெருமாளை,—'ப்ரணமாமி' ஸேவிக்கிறேன்.) ௧௧

RangaRakes tamilnavarasam.com

சஉ. பிடரியில்,—

సదాకకుద్మతంలోక సుందరీపతిమద్భుతం·
దామోదరంచతుఃపాశ మింద్రగోపనిభంభజే.

ஸதாககுத்மதம்லோக ஸுந்தரீபதிமத்புதம்
தாமோதரம்சதுஃபாஶ மிந்த்ரகோபநிபம்பஜே என்றும்,

('ககுத்மதம்' பிடரியையுடைத்தாயிருக்கிற, (அதாவது அடைந்திருக்கிற) 'லோகஸுந்தரீபதிம்' லோகசுந்தரியென்கிற தேவிக்கு அதிபதியாய்,—'அத்புதம்' அப்படிப்ராவித்தரான, 'சதுஃபாசம்' நான்குபாசங்களையுடைய,—'இந்த்ரகோபநிபம்' பட்டுப்பூச்சிபோன்ற பிரகாசத்தையுடைய,—'தாமோதரம்' தாமோதரனென்கிறபெருமாளை,—'ஸதா' எப்பொழுதும்,—'பஜே' ஸேவிக்கிறேன்.) கஉ

அநுஸந்தித்துக்கொண்டே அந்தந்தஸ்தானத்தில் அஞ்சலிசெய்து:—

---

சுருதியில்,—

ఆచార్యాణామసావసావిత్యాభగవత్తః·
ஆசார்யாணமஸாவஸாவித்யாபகவத்தஃ

என்கிறபடியே - தன் ஆசார்யனால் ப்ரஸாதிக்கப்பட்ட (கச - வாக்ய குருபரம்பராயாகிய) கஉ-வாக்யங்களையும்:— கூரத்தாழ்வானருளிச்செய்த ஶ்லோக குருபரம்பராயாகிய (கரு - அஸ்மத்தேஶிகேத்யாதி) ஶ்லோகத்தையும்,—(கசு - திருமந்த்ர, கஎ - த்வய, கஅ - சரமஶ்லோகங்களையும் அநுஸந்தித்து;—

ఆచార్యవాన్ పురుషో వేద - ஆசார்யவான்புருஷோவேத

என்கிறபடியே தனக்கு ஆசார்யனாலே ஸ்வரூபலாப மாகையாலே அவன்செய்த உபகாரங்களையுஞ் சிந்தித்து;—

సచాచార్యవంశోజ్ఞేయః· ஸசாசார்யவம்ஶோஜ்ஞேயஃ

என்கிறபடி (௧௯-ஆசார்யன் தனியனையும், அவர் வம்ஶ பரம்பரையில்) மணவாளமாமுனிகள் பர்யந்தமுள்ள தனியன்களையும், (௨௦-மணவாளமாமுனிகள்முதல் பெரியபெருமாள்) வரையிலுமுள்ள தனியன்களையும் ஸேவித்தல்வேண்டும்.

## ௫. காலக்ஷேபஞ்செய்தல்.

ஸ்ரீபகவத்விஷயாதி அஷ்டாதஶரஹஸ்யம்முதலிய வ்யாக்யாநக்ரந்த காலக்ஷேபங்களைக் காலோசிதமாய்ச்செய்து தண்டன் ஸமர்ப்பித்து, தீர்த்தவடியைச்சேர்த்து தீர்த்தம் ஸ்வீகரித்து, திருமண்பெட்டியைச் சேர்த்து எழுந்தருளச் செய்யவேண்டியது.

# திருவாராதநக்ரமம்.

## ௬. திருக்காப்புநீக்குதல்.

திவ்யதேஶத் தெம்பெருமானுடைய சித்ரஸ்வரூபமாகிய படம், அல்லது விக்ரஹம், திருவடி, அபயஹஸ்தம், ஆசார்யன்திருவடிநிலை, இவைகளைத் தன்க்ருஹத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, நித்யகர்மாநுஷ்டாநாநந்தரம் - பாதப்ரக்ஷாளநபூர்வமாக ஆசமநம்பண்ணி, பகவத்ஸந்நிதி முன்பே சென்று - தெண்டன் ஸமர்ப்பித்து, ௨௧ - கௌஸல்யா என்னும் ஶ்லோகத்தையும், ஸ்ரீஶைலேஶதனியன்தொடங்கி ப்ரணதோஸ்மி நித்யம்வரையிலும், திருப்பள்ளி யெழுச்சியையும், (௨௨ - அங்கண்மாஞாலத்தையும்) ஸேவித்தபின்பு, (௨௩- நாயகனாய்நின்ற) பாசுரத்தால் மூன்றுதரம் கையைத்தட்டித் திருக்காப்புநீக்கவும்.

திருவாலவட்டம் ஸமர்ப்பித்து, திருப்பள்ளிசோதித்து; (௨௪ - மாரிமலை) என்கிறபாசுரத்தால் எம்பெருமானுக்கு த்ர

RangaRakes tamilnavarasam.com

நவிம்ஹாஸநமென்று திருத்துழாய் ஸமர்ப்பித்து, ஸ்ரீய:பதியை அதிலெழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து, அப்படியே அவர்பத்தெட்டடியிட்டு எழுந்தருளினதாகப் பாவித்து அங்கடையழகுக்கு (உடு-அன்றிவ்வுலகம்)என்கிறபாசுரத்தால் மங்களாஸாஸநஞ்செய்து, (உகூ - ராமாநுஜாங்க்ரி) என்கிற ஶ்லோகத்தை யநுஸந்தித்துநின்று பெருமாள் ஸந்நிதியில்தெண்டன் ஸமர்ப்பித்து வாக்யகுருபரம்பரை,திருமந்த்ரம், த்வயம், சரமஶ்லோகம் இவைகளையும் (உஎ - த்யாநஶ்லோகத்தையும் அநுஸந்திக்கவும்.

## எ. வட்டில்களில் தீர்த்தஞ்சேர்த்தல்.

பெருமாளுக்கு வலதுபக்கத்திலேயிருந்து ஸ்வாசார்யனால் நியமிக்கப்பட்டவனாய் (நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாந் த்வச்சரணாரவிந்தே-அகிஞ்சநோ நந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே) என்றநுஸந்தித்து பின்பு ஸந்நிதிபாத்ரங்களைச் சோதித்து பரிசுத்தமாய்க்கொண்டு வந்திருப்பதைப் பெருமாள்சந்நிதியில் ஓராஸநம் அல்லது மணையின்மீது அடியிற் கண்டிருக்கிறபடி திருக்காவேரி யென்னும் தீர்த்தச்சொம்பையும் படிகத்தையும், ஒரு பாத்ரவேதிகையில் - அர்க்ய, பாத்ய, ஆசமநீய, ஸ்நாநங்களுக்காக வலதுபுறத்திலிருந்து ப்ரதக்ஷிணமாக நான்குபக்கத்தில் நாலுவட்டில்களையும், நடுவே சுத்தோதக வட்டிலையும், எதிர்ப்புறத்தில் வேறே இரண்டு வட்டில்களையும் அமர்த்தி வட்டில்களுக்கு * சோஷண தஹநப்லாவநங்கள செய்யவேண்டும்.

* சோஷண தஹநப்லாவநங்கள் என்பது- வட்டில்களை வாயுவினால் உலர்த்தி, அக்னியினால் தஹிப்பித்து, ஜலத்தினால் சுத்திசெய்த பாவமாக அதற்குரிய - ஸ்ரீமதேநாராயணாயநம: என்னும் மந்திரத்தை உச்சரிக்க வட்டில்கள் சுத்தியாகும்.




௨
௧
௫
௩
௪
௮
௯
௭
௬

௧. அர்க்யம்-ஸ்ரீஹஸ்தம் விளக்குகிறது.
௨. பாத்யம்-திருவடிகள் விளக்குகிறது.
௩. ஆசமனீயம்-ஸ்வீகரிக்கிறது.
௪. ஸ்நாநம்-திருமஞ்சனஞ்செய்கிறது.
௫. சுத்தோதகம்-பரிசுத்ததீர்த்தம்.
௬. ஆசார்யனுக்கு - அர்க்யபாத்யாசமநீயஸ்நாநோதகதீர்த்தவட்டில்.
௭. ஷை-சுத்தோதகவட்டில்.
௮. திருக்காவேரியென்னும் தீர்த்தச்சொம்பு.
௯. படிகம்.

சொம்புதீர்த்தத்தில் திருத்துழாய் ஏலக்காய்பொடி சாத்துப்படி இவைகளைச்சேர்த்து, † சுரபிமுத்திரையால் தொட்டுச் சொம்பைக் கையினால் மூடிக்கொண்டு, ஐந்துதரம், (உஅ-உத்தரவாக்யத்தால்) அபிமந்திரிக்கவும்.

சொம்பிலிருக்கும் தீர்த்தத்தாலும் திருத்துழாயாலும் உத்தரவாக்கியத்தைக் கொண்டபிமந்திரித்த உத்தரணியில் மேற்படி தீர்த்தங்கொண்டு மேற்படி வாக்கியத்தால் ஐந்துவட்டில்களையும் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, அந்தச்சொம்பிலிருக்குந் தீர்த்தத்தை அர்க்யவட்டில்தொடங்கிப் பிரதக்ஷிணமாக நாலுவட்டில்களிலும் நடுவட்டிலிலும் பூரித்து ‡ திருத்துழாயும் ஏலக்காய்ப் பொடியும் சாத்துப்படியுஞ் சேர்த்து, ஐந்துவட்டில்களையும் ஒவ்வொன்றாக சுரபிமுத்தி

---

† சுரபிமுத்திரை என்பது - இரண்டுஹஸ்தங்களையும் மடக்கி, நடுவிரலும், ஆள்காட்டிவிரலும், சுண்டுவிரலும், பவித்திரவிரலும், பசுவின்முலையைப்போல நாலுவிரல்கள் முனைமாத்திரம் வெளியில் தெரியும்படி வைத்துக்கொண்டு வட்டில்களின்பேரில் ஸ்பரிசிக்க பவித்திரமாகும்.

‡ திருக்காவேரி என்னுஞ் சொம்பாவது அல்லது ஆழ்வாராசார்யர்கள் திருவாராதனத்திற்குப் பிரத்யேகவட்டில்களாவதில்லாதிருந்தால், சொம்பு தீர்த்தத்தை வட்டில்களில் பூரிக்கும்போதெல்லாம் உடனே அந்த வட்டில்களிலிருந்து உத்தரணியால் கொஞ்சந் தீர்த்தமெடுத்து சொம்பில் சேர்த்துவிட்டால் அந்தத்தீர்த்தம் சேஷப்படாமல் உபயோகப்படும்.

RangaRakes tamilnavarasam.com

ரைகாட்டி, வலதுகையினால்மூடி உத்தரவாக்யத்தால் ஐந்து தரம் அபிமந்திரிக்கவும்.

திருத்துழாய்தளத்தைப் பவித்திரவிரலுக்கும் நடுவிரலுக்கும் மத்தியிலிடுக்கிக்கொண்டு, பாத்யவட்டில் தொடங்கி மூன்றுவட்டில்களிலும் நடுவட்டிலிலும் கொஞ்சங்கொஞ்சமாய் உத்தரணியால் தீர்த்தமெடுத்து அர்க்கியவட்டிலிற்சேர்த்து, அர்க்கியவட்டிலிலிருந்து தீர்த்தத்தை உத்தரணியாலெடுத்து திருத்துழாயுடனே கையினால் உத்தரணியை மூடிக்கொண்டு முகத்துக்கு நேரே தூக்கி - ஸ்ரீவிரஜை, திருக்காவேரி, ஸ்வாமி புஷ்கரணி, அநந்த ஸரஸ், திருத்தாம்பிரபர்ணி, திருக்கல்யாணி முதலான நூற்றெட்டு திவ்யதேச தீர்த்தங்களென்றுபாவித்து,உத்தரவாக்கியத்தால் ஐந்துதரம் அபிமந்திரித்து, அர்க்கியவட்டில்தவிர மற்ற நாலுவட்டில்களிலும்சொம்பிலும் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்த்து சேஷத்தைத் திருத்துழாயாலே பெருமாள் முதலியவர்கள், ஆசார்யர், சந்நிதிபரிகரங்கள் மீதும், தன்மீதும் புரோக்ஷித்து, மிகுந்த தீர்த்தத்தைப் படிகத்திற் சேர்த்துவிடவும்.

## அ. ஆசார்யனுக்குத்திருவாராதனம் சமர்ப்பித்தல்.

சொம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியாலெடுத்து உத்தரவாக்கியத்தால் வேறே இருக்கிற இரண்டு வட்டில்களைச்சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, மேற்படி சொம்பு தீர்த்தத்தை அவ்விரண்டு வட்டில்களிலும் பூரித்து, திருத்துழாயைச்சேர்த்து சுரபிமுத்திரைகாட்டி, ஒவ்வொருவட்டிலேயும்வலதுகையினால் மூடிக்கொண்டு ஐந்துதரம்உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, ஒருவட்டிலில் உத்தரணியால் தீர்த்தமெடுத்து 'அஸ்மத்குருப்யோநம:' 'அர்க்கியங்கண்டருளாய்' என்று அநுசந்தித்துக்கொண்டே ஆசார்யர் திருமுன்புகாட்டிப் படிகத்தில் சேர்த்துவிட்டு, இரண்டாந்தரமும் மூன்றாந்தரமு மப்படியே 'அவ்வட்டில் தீர்த்தத்தையே உத்தரணியாலெடுத்து ஆசார்யர் திருமுன்புகாட்டி படிகத்திற்சேர்

த்துவிட்டு வேறே வட்டிலிலிருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு அந்த அர்க்கியவட்டிலில் தானே உத்தரணியால் தீர்த்தமெடுத்து 'அஸ்மத்குருப்யோநம:' 'பாத்தியங்கண்டருளாய்' என்று முன்போலவே மும்மூன்றுதரம் ஆசார்யர் திருவடிகளுக்குக் காட்டிப் படிகத்தில் சேர்த்துவிட்டு சுத்தோதகத்தினால் உத்தரணியைச்சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு மறுபடியும் அவ்வட்டிலிற்றானே உத்தரணியால் தீர்த்தமெடுத்து ஆசார்யன் திருக்கைகளைவிளக்கி அர்க்கியபாத்திரத்தினின்று ம்மூன்றுதரம் * கண்டூஷம் சமர்ப்பித்து உத்தரணியைச் சுத்தோதகத்தினால் சோதித்து மருபடியும் அவ்வட்டிலிற்றானே உத்தரணியால் தீர்த்தமெடுத்து, அஸ்மத்குருப்யோநம:' 'ஆசமனீயங்கண்டருளாய்' என்று மும்மூன்றுதரம் ஆசார்யர் திருப்பவளத்துக்குக்காட்டிப் படிகத்திற் சேர்த்துவிட்டு சுத்தோதகத்தினால் உத்தரணியைச்சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு 'அஸ்மத் குருப்யோநம:' என்று திருத்துழாய் அல்லது தளுவத்தினால் திருஒற்றாடை ஸமர்ப்பிக்கவும்.

ஸ்நாநாசனத்தி லெழுந்தருளச்செய்ய 'அஸ்மத்குருப்யோநம:' என்று திருத்துழாய் ஸமர்ப்பித்து, (உகூ—வெண்ணெயளைந்த) என்னும் பாசுரந்தொடங்கி பத்துப் பாசுரங்களையாவது அல்லது ஆத்யந்த பாசுரங்களையாவது சேவித்து, அந்த அர்க்யவட்டிலிலிருக்கும் தீர்த்தத்தைத்தானே உத்தரணியாலெடுத்து 'அஸ்மத்குருப்யோநம:' 'நீராட்டங்கண்டருளாய்' என்று திருத்துழாய் தளத்தைக்கொண்டு ஆசார்யனுக்குப் புரோக்ஷித்துத் திருமஞ்சனமும், திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

அலங்காராஸனத்தி லெழுந்தருளச்செய்ய 'அஸ்மத்குருப்யோநம:' என்று திருத்துழாய் ஸமர்ப்பித்துத் திருப்பரிவட்டமாக பாவித்து 'அஸ்மத்குருப்யோநம:' என்று திருத்துழாயும், (ங0 - வகையால்) என்கிற பாசுரத்தால் 'அஸ்ம

* கண்டூஷம் - வாய்க்கொப்பளித்தல்.

RangaRakes tamilnavarasam.com

த்குருப்யோநம:' என்று தூபமும், * அர்க்கியபாத்யாசமனீய மும், பிறகு திரு ஒற்றாடையும்; (௰௧ - கேசவன்றமர்) என்கிற பாசுரங்களால் அல்லது கேசவர் திருநாமங்களால் திருமண்காப்பாகத் திருத்துழாயும்; (௰௨ - பூசுஞ்சாந்து) என்கிற பாசுரத்தால் சாத்துப்படியும், புஷ்பமும், திருவாபரணமுமாக திருத்துழாயும்; (௰௩ - பரிவதிலீசன்) என்கிற பாசுரத்தால் தூபமும், (௰௪ - வையந்தகளியா) என்கிற பாசுரத்தால் தீபமும், பல்லாண்டு என்கிற பாசுரத்தால் கற்பூரமும், பிறகு அர்கக்கியபாத்யாசமனீயமும், திருவொற்றாடையும், (௰௫ - சென்றாற்குடையாம்) என்கிற பாசுரத்தால் மந்திர புஷ்பமாகத் திருத்துழாயும் ஸமர்ப்பிக்கவும்.

ஆசார்யர் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதனஞ் சமர்ப்பிக்கிறதாகப்பாவித்து, ஸ்வாசார்யருக்குச் சமர்ப்பித்த இரண்டு வட்டில்களிலுள்ள தீர்த்தத்தைப் படிகத்திற் சேர்த்துவிட்டு சொம்பிலிருக்கும் தீர்த்தத்தினாலே முன்போல வட்டில்களைச் சோதித்து தீர்த்தம்பூரித்து ஸ்வாசார்யருக்குச் சமர்ப்பித்தபடியே 'அஸ்மத்குருப்யோநம:' என்னும் வாக்கியத்திற்குப்பதிலாகமாத்திரம், பராங்குச பரகால யதிவராதிப்யோநம:' என்று அநுசந்தித்து ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதனஞ் சமர்ப்பிக்கவேண்டும்.

---

* அர்க்கியபாத்யாசமனீயம், திரு ஒற்றாடை, திருமண்காப்பு, சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணம், தூபம், தீபம், கற்பூரம், முதலியவை ஸமர்ப்பிக்கும் போதெல்லாம் அததற்குரிய பாசுரங்களோடேகூட 'அஸ்மத்குருப்யோநம:, என்று ஸ்வாசார்யருக்கும், 'பராங்குச பரகாலயதிவராதிப்யோநம:, என்று ஆழ்வாராசார்யர்களுக்கும், 'ஸர்வமங்கள விக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாயநம:, என்று பெருமான், பிராட்டியார், அநந்தகருட விஷ்வக்ஸேநஸூத்ர்பூந பாஞ்சசன்ய முதலானார்களுக்கும், முதலிற் காட்டியபடியே அந்தந்த பாசுரங்களோடேகூட அவரவர்களுக்குரிய வாக்கியங்களை யநுசந்தித்து அவரவர்களுக்கு உசிதமானபடி திருவாராதனம் ஸமர்ப்பிக்கவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

ஆசார்யர் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதனம் ஸமர்ப்பிக்கிறதாகப்பாவித்து, ஐந்துவட்டில்களுள் அர்க்கியவட்டிலிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியிற்கொண்டு 'ஸர்வமங்களவிக்ரஹாய, ஸமஸ்தபரிவாராய, ஸ்ரீமதேநாராயணாயநம:' என்று மூன்றுதரம் அர்க்யஞ்சமர்ப்பித்து, நடுவட்டிலிலிருக்குஞ் சுத்தோதகத்தினால் உத்தரணியைச்சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, பாத்யவட்டிலிலிருக்குந் தீர்த்தத்தினால் மூன்றுதரம் பாத்யம்ஸமர்ப்பித்து மேற்படி சுத்தோதகத்தினால் உத்தரணியைச்சோதித்துப் படிகத்திற்சேர்த்துவிட்டு, மறுபடியும் அர்க்யபாத்திரத்தில் தீர்த்தமெடுத்து திருத்துழாய்கொண்டு எம்பெருமான் திருக்கைகளைவிளக்கி அந்தபாத்திரத்தினின்றுமே மூன்றுதரம் கண்டூஷம்ஸமர்ப்பித்து உத்தரணியை சுத்தோதகத்தால் சோதித்து ஆசமனீயவட்டிலிலிருக்கும் தீர்த்தத்தினால்மூன்றுதரம் ஆசமனீயம்ஸமர்ப்பித்து,சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப்படிகத்தில் சேர்த்துவிட்டு, திரு ஒற்றாடை ஸமர்ப்பிக்கவும். பிறகு ஸ்நாநாசனத்திலெழுந்தருளச்செய்து, அர்க்கியபாத்ய ஆசமனீயம் திருவொற்றாடைஸமர்ப்பித்து ஒருதிருத்துழாயாலே திருமுத்துவிளக்கியருளப்பண்ணி மற்றொரு திருத்துழாயாலே திருநாவழித்து அர்க்யபாத்திரத்தினின்றும் மூன்றுதரம் அர்க்யம்ஸமர்ப்பித்து பாத்யஆசமனீயம் ஸமர்ப்பிக்கவும், சுருளமுது கண்டருளப்பண்ணி ஸ்நாநபாத்திரத்தினின்று (வெண்ணெயளைந்தகுணுங்காலே) திருமஞ்சனமும் பிறகு திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து, அலங்காராசனத்தி லெழுந்தருளச்செய்து, முன்போலவே திருப்பரிவட்டமும்; தூபமும், அர்க்யபாத்யாசமனீயமும், திரு ஒற்றாடையும்; திருமண்காப்பு, சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணம், தூபம், தீபம், கற்பூரம், அர்க்யபாத்யாசமனீயம்,திருஒற்றாடை,மந்திரபுஷ்பம் முதலியவையும்,ஸமர்ப்பித்து எம்பெருமானே ஸகல அபசாரங்களையும் பொறுத்தருளி ஸமஸ்தோபசாரங்களையும் திருவுள்ளம் பற்றியருளவேண்டுமென்று திருவடிகளில் திருத்துழாய் ஸமர்ப்பிக்கவும்.

RangaRakes tamilnavarasam.com

## ௬. ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்.



## ய. பெருமாள், பிராட்டியார், அநந்தகருடவிஷ்வக்ஸேநவஸூதர்ஸந பாஞ்சஜந்ய முதலானோர்களுக்குத் திருவாராதகம் ஸமர்ப்பித்தல்.



RangaRakes tamilnavarasam.com

## ௰க. திவ்யப்ரபந்தஞ் சேவித்தல்.

——(*)——

(௩௯-குருமுகமென்னுந்) தனியனைத்தொடங்கி, திருப்பல்லாண்டு, 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' 'இராமாநுசநூற்றந்தாதிகளைச் சேவிக்கவும்.

———

## ௰உ. பிரஸாதங்கண்டருளப் பண்ணுதல்.

——:o:——

போஜ்யாஸனத்தி லெழுந்தருளச்செய்ய 'ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணாயநம:' என்று திருத்துழாய் ஸமர்ப்பித்து, ஐந்து வட்டில்களிலிருக்குந் தீர்த்தத்தைக்கொண்டு மேற்படி வாக்கியங்களினால் அர்க்யபாத்யாசமனீயமும், திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து, அர்க்யவட்டிலிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியினால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு உத்தரவாக்யத்தால் புரோக்ஷித்து ஸ்தலசுத்தி செய்யவும்.

தளிகை ஸமர்ப்பித்து; அர்க்யவட்டிலிலிருந்து உத்தரணியால் தீர்த்தத்தையெடுத்து உத்தரவாக்கியத்தால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு மேற்படி தளிகைமுதலியவற்றுக்குப் புரோக்ஷித்து திருத்துழாயையுஞ் சேர்த்து, சுரபிமுத்திரைகாட்டி, பிரஸாதத்தின்பேரில் கையைவைத்துக்கொண்டு உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, உத்தரணியால்தீர்த்தத்தை இரண்டுதரம் பிரதக்ஷிணமாக உத்தரவாக்ய மநுஸந்தித்துத் தளிகையைச்சுற்றி, (௩௭-நாறுநறும்பொழில், ௩௮-இன்னுவந்தித்தனை, ௩௯-கூடாரை) என்கிறபாசுரங்கள் சேவிக்கிறபர்யந்தம் உத்தரணியுடனே கைகாட்டிக்கொண்டிருக்கவும். பாசுரங்களைச் சேவித்து, 'ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய, ஸ்ரீமதேநாராயணாயநம:' என்று பெருமான் முதலானவர்களுக்குப் பிரசாதமுந் தீர்த்தமுங் கண்டருளவித்து. அர்க்யபாத்யாசமனீயமும், திருஒற்றாடையும்ஸமர்ப்பிக்கவும்.

RangaRakes tamilnavarasam.com

பின்பு 'பராங்குசபரகால யதிவராதிப்யோநம:' என்று போஜ்யாஸனத்தி லெழுந்தருளவைத்து, மேற்படி ஐந்துவட்டில்களிலுள்ள தீர்த்தத்திலேயே அர்க்யபாத்யாசமனீயஞ்சமர்ப்பித்து, மேற்படி பாசுரங்களைச் சேவித்து 'பராங்குசபரகால யதிவராதிப்யோநம:' என்று நம்மாழ்வார்முதலியபூர்வாசார்யர்களுக்கு அப்பிரசாதமும் தீர்த்தமுங்கண்டருளவித்து அர்க்யபாத்யாசமனீயமும திருவொற்றாடையுஞ்ஸமர்ப்பிக்கவும்.

'அஸ்மத்குருப்யோநம:' என்று போஜ்யாஸனத்தி லெழுந்தருளவைத்து, மேற்படி ஐந்து வட்டில்களிலுள்ள தீர்த்தத்திலேயே அர்க்யபாத்யாசமனீயஞ் சமர்ப்பித்து, மேற்படி பாசுரங்களைச் சேவித்து 'அஸ்மத்குருப்யோநம:' என்று ஸ்வாசார்யருக்கு அந்தப்பிரசாதமுந் தீர்த்தமுங்கண்டருளவித்து அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்துத் தளிகையைமாற்றிவிட்டு, 'ஸ்ரீமதே நாராயணாயநம:' என்று ஸ்தலசுத்திசெய்யவும்.

---

## ௰௩. அடைக்காயமுது செய்வித்தல்.

பர்யங்காஸனத்தி லெழுந்தருளச்செய்ய 'ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணாயநம:' என்று திருத்துழாய் ஸமர்ப்பித்துச் சொம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியால் மேற்படி வாக்யங்களை யநுசந்தித்து அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையுஞ் சமர்ப்பித்து, மேற்படி சொம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியாலெடுத்து, உத்தரவாக்யத்தால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு அடைக்காய்க்குப் ப்ரோக்ஷித்து திருத்துழாயுஞ்சேர்த்து, (௪0-போய்ப்பாடுடைய) என்கிற பாசுரத்தையும் மேற்படி வாக்யங்களையும் அநுசந்தித்துப் பெருமாள் முதலானவர்களுக்கு அடைக்காயமுது செய்வித்து அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையுஞ் சமர்ப்பித்து; 'பராங்குசபரகால யதிவராதிப்யோநம:' என்று பர்யங்காஸனத்தி லெழுந்தருளவைத்

து நம்மாழ்வார்முதலிய பூர்வாசார்யர்களுக்கு சொம்பிலிருக்குந் தீர்த்தத்தினால் அர்க்யபாத்யாசமனீயமும் திருஒற்றாடையும் ஸமர்ப்பித்து, அடைக்காயமுதுசெய்வித்து, அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து; 'அஸ்மத் குருப்யோநம:' என்று பர்யங்காஸனத்திலெழுந்தருளவித்து ஸ்வாசார்யருக்கு அந்தச்சொம்பிலிருக்குந்தீர்த்தத்தினாலேயே அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து, அடைக்காயமுது செய்வித்துப் பின்பு அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து, திருப்பல்லாண்டினால் கற்பூரஞ் சமர்ப்பிக்கவும்.

## ௰௪. சாத்து.

சிற்றம், வங்கம், (௬க-இருப்பிடம், ௬உ-இன்புற்ற, ௬௩-அங்கயல், ௬௪-பூமன்னு) என்கிற பாசுரங்களைச் சேவித்துக் கொண்டே திருத்துழாயும், திருப்பல்லாண்டினால் கற்பூரமும்ஸமர்ப்பித்து,(௬௫-ஸர்வதேச) முதலியவாக்யங்களையும் வாழித்திருநாமங்களையும் அஞ்சலி ஹஸ்தராய் அநுசந்திக்கவும்.

## ௰௫. திருக்காப்பு நீக்குதல்.

——:0:——

ஸையாஸனத்தி லெழுந்தருளச்செய்ய உத்தரவாக்யத்தால் திருத்துழாய் ஸமர்ப்பித்துத் திருக்காப்பு சேர்க்கும் போது, (௬௬-உபசாரோபதேசேன) என்னும் சுலோகத்தை யநுசந்தித்துத் திருக்காப்புச் சேர்த்துத் தண்டன் ஸமர்ப்பிக்கவும்.

## ௰௬. பிரஸாதம் ஸ்வீகரித்தல்.

——*——

படிகத்திலிருக்கிற தீர்த்தமும் திருத்துழாயும் உத்தரவாக்யத்தால் ஸ்வீகரித்து, பின்பு எம்பெருமான் முதலானவர்களுக்குக் கண்டருளப் பண்ணின சேஷத்தை 'அஸ்மத்

குருப்யோநம:' என்று ஆசார்யர்தனியனை யநுசந்தித்து ஸ்வீகரிக்கவேண்டும்.

## ௧எ. காலக்ஷேபஞ்செய்தல்.

பகவத்விஷய ' அஷ்டாதசரஹஸ்யாதி வியாக்யாந காலக்ஷேபஞ் செய்யவும்.

## ௧அ. இராத்திரியில்ப்ரஸாதங் கண்டருளப் பண்ணுதல்.

இராத்திரியில் தௌதமாய்க் கையைத்தட்டிப் பெருமாள்ஸந்நிதித் திருக்காப்புநீக்கிச் செம்பிலிருக்கும் புதியதீர்த்தத்தினால் ஐக்துவட்டில்களையும் உத்தரணியைக்கொண்டு சோதித்துப் படிகத்திற் சேர்த்துவிட்டு, வட்டில்களில் தீர்த்தம்பூரித்து, சுரபிமுத்திரைகாட்டி, உத்தரவாக்யத்தால் அபிமந்திரித்து, "ஸர்வமங்களவிக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று பெருமாள் முதலானவர்களுக்கு அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

ஸ்ரீசைலேசதனியன்தொடங்கி, திருப்பல்லாண்டு, (௪அ-ஆதினை, ௫௯ - இந்திரன், ௬௦ - சென்னி, ௬௧ - அமலனாதி, கண்ணிநுண்சிறுத்தாம்பு, ௬௨ - ஏழைபேதலன், ௬௩ - ஆழியெழச்சங்கும்) இவைகளைச்சேவித்து, "ஸர்வமங்களவிக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று அர்க்யபாத்யாசனீயமும் திருவொற்றாடையும் ஸமர்ப்பித்து உத்தரணி தீர்த்தத்தினால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு உத்தரவாக்யத்தினால் புரோக்ஷித்து ஸ்தலசுத்திசெய்யவும்.

தளிகைஸமர்ப்பித்து, அர்க்யவட்டிலிலிருந்து உத்தரணியால் தீர்த்தத்தையெடுத்து உத்தரவாக்யத்தால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு ஷை தளிகைக்குப் புரோக்ஷித்து, சுரபிமுத்திரைகாட்டித் திருத்துழாயைத் தளிகைமுதலானவற்

றுக்குச்சேர்த்துப் ப்ரஸாதத்தின்பேரில் கையைவைத்துக் கொண்டு உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, உத்தரணி யால் தீர்த்தத்தை இரண்டுதரம் பிரதக்ஷிணமாக உத்தரவாக் கியமநுஸந்தித்துத் தளிகையைச்சுற்றி, நாறு நறும்பொழில், இன்றுவந்தித்தனை, கூடாரைஎன்னும் பாசுரங்களாலும்,"ஸர் வமங்களவிக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாயந மஃ" என்னும் வாக்கியங்களாலும் பெருமான் முதலானவர்க ளுக்குப் பிரஸாதமும் தீர்த்தமும் கண்டருளவித்து ஷை வாக் கியங்களினால் அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

ஷை ஐந்துவட்டில்களிலுள்ள தீர்த்தத்தினால் "பராங்குச பரகால யதிவராதிப்யோநமஃ" என்று அர்க்யபாத்யாசமனீய மும் திருஒற்றாடையும் ஸமர்ப்பித்து, (நாறுநறும்பொழில்மு தலிய பாசுரங்களுடன்) இவ்வாககியத்தை மறுபடியு மநுஸந் தித்து நம்மாழ்வார்முதலான பூர்வாசார்யர்களுக்கு அந்த ப்ர ஸாதமும் தீர்த்தமுங்கண்டருளவித்து, மீளவும் ஷை வாக்யத் தினாலேயே அர்க்யபாத்யாசமனீயமும் திருஒற்றாடையும் ஸம ர்ப்பிக்கவும்.

ஷை ஐந்துவட்டில்களிலிருக்கும் தீர்த்தத்தினால் "அஸ் மத்குருப்யோநமஃ" என்று அர்க்யபாத்யாசமனீயமும், திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து (நாறுநறும்பொழில்முதலிய பாசு ரங்களுடன்) இவ்வாக்யத்தை மறுபடியுமநுஸந்தித்து ஸ்வா சார்யருக்கு அந்தப்ரஸாதமும் தீர்த்தமுங்கண்டருளவித்து, மறுபடியும் இவ்வாக்கியத்தினாலேயே அர்க்யபாத்யாசமனீய மும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும், தளிகையை மாற் றிக்கொண்டு "ஸ்ரீமதேநாராயணாயநமஃ" என்று ஸ்தலசுத்தி செய்யவும்.

சொம்பிலிருக்கும் தீர்த்தத்தினால் "ஸர்வமங்கள விக்ர ஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநமஃ" என்று அர்க்யபாத்யாசமனீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்துச்

RangaRakes tamilnavarasam.com

சொம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியினாலெடுத்து உத்த ரவாக்கியத்தினால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு அடைக்காய்க்குப் புரோக்ஷித்துத் திருத்துழாயுஞ்சேர்த்து, "போய்ப்பாடுடைய" என்கிற பாசுரத்தையும் ஷை. வாக்கியங்களையு மநுஸந்தித்துக்கொண்டு பெருமாள் முதலானவர்களுக்கு அடைக்காயமுதுசெய்வித்து ஷைவாக்யங்களினால் அர்க்யாதியும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

பராங்குசபரகால யதிவராதிப்யோநம: என்று நம்மாழ்வார்முதலான பூர்வாசார்யர்களுக்கும் அஸ்மத்குருப்யோநம: என்று ஸ்வாசார்யருக்கும் அர்க்யபாத்யாசமனீயங்கள் ஸமர்ப்பித்து, (போய்ப்பாடுடைய) என்னும் பாசுரத்துடன் ஷை. வாக்யங்களையு மநுஸந்தித்து அவ்வடைக்காயை யமுதுசெய்வித்துமீண்டும் ஷை. வாக்யங்களினால் அர்க்யாதியும் திரு ஒற்றாடையும்; திருப்பல்லாண்டினால் கர்ப்பூரமும் ஸமர்ப்பித்து, ஸர்வதேசமுதலிய வாக்கியங்களும் வாழித்திருநாமங்களும் ஸேவித்து திருக்காப்பு சேர்த்துவிடவும்.

ததநந்தரம் தத்சேஷப்ரஸாதத்தை ஸ்வீகரித்து சயநிக்கும்போது வாக்கியகுருபரம்பரை த்வயம் இவற்றை அநுஸந்தித்து கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரம்முதலான நூற்றெட்டுத் திவ்யதேச எம்பெருமான்களையும் ஆழ்வாராசார்யர்முதல் தன்னுசார்யன் பர்யந்தமுள்ளவர்களையும் பாவனுப்பிரகர்ஷத்தாலே ஸேவித்து, (௩௪ - நாகணைமிசை என்னும் பாசுரத்தையும்) (௩௩ - ராமாநுஜாங்க்ரி என்னும்ஸ்லோகத்தையும்) அநுஸந்தித்துக்கொண்டே சயனித்து மறுபடி விழித்துக்கொள்கையில் முன்சொன்னபடி குருபரம்பரையையும் த்வயத்தையும் அநுஸந்திக்கவும்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

## திருவாராதநக்கிரமம்.

முற்றிற்று.

---

RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆழ்வார்கள் பதின்மரொடு ஆண்டாள் மதுரகவிகளுடைய வாழித்திருநாமங்கள்.

—:0:—

## பெரியபெருமாள்.

இவர் திருநக்ஷத்ரம்-திருவோணம்.

திருமகளும்மண்மகளுஞ்சிறக்கவந்தோன்வாழியே
செய்யவிடைத்தாய்மகளார்சேவிப்போன்வாழியே
இருவிசும்பில்வீற்றிருக்குமிமையவர்கோன்வாழியே
இடர்கடியப்பாற்கடலையெய்தினான்வாழியே
அரியதசரதன்மகனாயவதரித்தான்வாழியே
அந்தரியாமித்துவமுமாயினான்வாழியே
பெருகிவரும்பொன்னிநடுப்பின்றுயின்றான்வாழியே
பெரியபெருமாளெங்கள்பிரானடிகள்வாழியே.

## பெரியபிராட்டியார்.

இவர் திருநக்ஷத்ரம்-பங்குனி உத்திரம்.

பங்கயப்பூவிற்பிறந்தபாவைநல்லாள்வாழியே
பங்குனியிலுத்திரத்திற்பாருதித்தாள்வாழியே
மங்கையர்கள்திலகமெனவந்தசெல்விவாழியே
மாலரங்கர்மணிமார்பைமன்னுமவள்வாழியே
எங்களெழிற்சேனைமன்னர்க்கிதமுரைத்தாள்வாழியே
இருபத்தஞ்சுட்பொருள்மாலியம்புமவள்வாழியே
செங்கமலச்சிரரங்கஞ்செழிக்கவந்தாள்வாழியே
சீரங்கநாயகியார்திருவடிகள்வாழியே.

இவர்கள் திருவடி ஸ்ரீசடகோபன்.

---

## பொய்கையாழ்வார்.

ஐப்பசிமாசம்-திருவோண நக்ஷத்ரம்.

செய்யதுலாவோணத்திற்செகத்துதித்தான்வாழியே
திருக்கச்சிமாநகரஞ்செழிக்கவந்தான்வாழியே
வையந்தகளிநூறும்வகுத்துரைத்தான்வாழியே
வனசமலர்க்கருவதனில்வளர்ந்தமைந்தன்வாழியே

RangaRakes tamilnavarasam.com

## வாழித்திருநாமங்க

வெய்யகதிரோன் தன்னைவிளக்கிட்டான்வ
வேங்கடவர்திருமலையைவிரும்புமவன்வ
பொய்கைமுனிவடிவழகும்பொற்பதமும்வ
பொன்முடியுந்திருமுகமும்பூதலத்

## பூதத்தாழ்வார்

ஐப்பசிமாதம்-அவிட்ட நக்ஷ

அன்பேதகளிநூறுமருளினான்வாழியே
ஐப்பசியிலவிட்டத்திலவதரித்தான்வாழி
நன்புகழ்சேர்குருக்கத்திநாண்மலரோன்
நல்லதிருக்கடன்மல்லைநாதனவன்வாழியே
இன்புருகுசிந்தைதிரியிட்டபிரான்வாழியே
எழின்ஞானச்சுடர்விளக்கையேற்றினான்வாழியே
பொன்புரையுந்திருவரங்கர்புகழுரைத்தான்வாழியே
பூதமுனிதாளிணைகள்பூதலத்தில்வாழியே.

## பேயாழ்வார்.

ஐப்பசிமாசம்-சதயநக்ஷத்ரம்.

திருக்கண்டேனெனநூறுஞ்செப்பினான்வாழியே
சிறந்ததுலாச்சதயநாள்செனித்தவள்ளல்வாழியே
மருக்கமழுமயிலைநகர்வாழவந்தோன்வாழியே
மலர்க்குளுயர்நெய்தன்மலர்வந்துதித்தோன்வாழியே
நெருக்கிடவேயிடைகழியினின்றசெல்வன்வாழியே
நேமிசங்கன்வடிவழகைநெஞ்சில்வைப்போன்வாழியே
பெருக்கமுடன்திருமழிசைப்பிரான்றொழுவோன்வாழியே
பேயாழ்வார்தாளிணைகள்பெருநிலத்தில்வாழியே.

## திருமழிசையாழ்வார்.

தைமாசம்-மகநக்ஷத்ரம்.

அன்புடனந்தாதிதொண்ணூற்றாறுரைத்தான்வாழியே
அழகாருந்திருமழிசையமர்ந்தபிரான்வாழியே
இன்பமிகுதையின்மகத்திலுதித்தான்வாழியே
எழிற்சந்தவிருத்தநூற்றிருபதுளான்வாழியே
முன்புகத்தில்வந்துதித்தமுனிவர்கோன்வாழியே
முழுப்பொன்னிப்பெருக்கெதிர்செல்முதிர்கவியோன்வாழியே
நன்புவியினாலாயிரத்தேழ்நூறிருந்தான்வாழியே
நங்கள்பத் ம்பதங்கள்வாழியே.

RangaRakes tamilnavarasam.com

## குலசேகராழ்வார்.

மாசிமாசம்-புநர்ப்பூச நக்ஷத்ரம்.

அஞ்சனமாமலைப்பி [illegible] யாதரித்தான்வாழியே
அணியரங்கர்மண [illegible] றூணையமர்ந்தசெல்வன்வாழியே
வஞ்சிநகரந்தன்னை [illegible] ாழ்வித்தான்வாழியே
மாசிதன [illegible] பூசம்வந்துதித்தான்வாழியே
அஞ்சலெ [illegible] ாம்பிற்கையிட்டான்வாழியே
அனைவ [illegible] வையகமகிழ்வோன்வாழியே
செஞ்சொ [illegible] ழிநூற்றஞ்சுஞ்செப்பினான்வாழியே
சேரலர்கோன் [illegible] கமலத்திருவடிகள்வாழியே

## பெரியாழ்வார்.

ஆனிமாசம்-சுவாதி நக்ஷத்ரம்.

நல்திருப்பல்லாண்டுதான்றான்றோன்வாழியே
நானூற்றறுபத்தொன்றநமக்குரைத்தான்வாழியே
சொல்லரியவானிதனிற்சோதிவைத்தான்வாழியே
தொடைசூடிக்கொடுத்தாளைத்தொழுதந்தைவாழியே
செல்வநம்பிதனைப்போலச்சிறப்புற்றான்வாழியே
சென்றுகிழியறுத்துமால்தெய்வமென்றான்வாழியே
வில்லிபுத்தூர்நகரத்தைவிளங்கவைத்தான்வாழியே
வேதியர்கோன்பட்டர்பிரான்மேதினியில்வாழியே.

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

மார்கழிமாசம்-கேட்டைநக்ஷத்ரம்.

மண்டங்குடிப்பதியில்வாழவந்தோன்வாழியே
மார்கழியிற்கேட்டைதனில்வந்துதித்தோன்வாழியே
தெண்டிரைசூழரங்கரையேதெய்வமென்றான்வாழியே
திருமாலைபொன்பான்செப்பினான்வாழியே
பண்டிருப்பள்ளியெழுச்சிப்பத்துரைத்தான்வாழியே
பாவையர்கள்கலவிதன்னைப்பழித்தசெல்வன்வாழியே
தொண்டுசெய்துதுளவத்தாற்றுலங்கினான்வாழியே
தொண்டரடிப்பொடிப்பெருமான்றுணைப்பதங்கள்வாழியே.

## திருப்பாணாழ்வார்.

கார்த்திகைமாசம்-ஷ்ரோகிணிநக்ஷத்திரம்.

உம்பர்தொழுமெஞ்ஞானத்துறையூரானவாழியே
உரோகிணிநாள்கார்த்திகையிலுதி [illegible] வாழியே [illegible] ழியே